அசல் வழக்கு எண். 164/2012 தேதி. 06.10.2021

வா.சா.2 பெருமாள்

9, 10, 13, மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நல்லுச்சாமிக்கு வாதி அருணாசலம் மற்றும் குழந்தைவேலு ஆகிய இரண்டு மகன்கள். குழந்தைவேலுவின் மருமகள் 2ம் பிரதிவாதி சிறும்பாயி. நான் சிறும்பாயின் அண்ணன். நான் புதுக்கல்லுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ராஜாமணி அவரது தாயார் நல்லம்மாள் குடியிருந்து வரும் வீடு அவரது பூர்வீக வீடாகும். வெள்ளைச்சாமி மற்றும் மாணிக்கம் ஆகியோர் வீடு ராஜாமணி வீட்டிற்கு மேற்கே உள்ளது. வாதியின் பாட்டனார் வள்ளிமுத்துவை எனக்கு தெரியும். அவர் இறந்து சுமார் 60 வருடங்களுக்கு மேல் இருக்கும். எனக்கு வயது 57 ஆகும். சிறும்பாயியை குழந்தைவேல் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்த பின்னர் தான் அவர்களை பற்றி எனக்கு தெரியும். ராஜாமணி சுமார் 30 ஆண்டுகளாக புதுக்கல்லுப்பட்டியில் வசித்து வந்தார். ராஜாமணியை கமுசுவர் கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்திருந்தனர். நல்லம்மாளின் கணவர் பெயர் நல்லுக்கவுண்டர். நல்லம்மாள் பழனிமுத்து கவுண்டரின் மகள். பழனிமுத்து கவுண்டர் மகள் நல்லம்மாளை நல்லுக்கவுண்டருக்கு திருமணம் செய்து கொடுத்தார். நல்லுக்கவுண்டர் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. நல்லுக்கவுண்டருக்கு தாவா சொத்து பூர்வீக சொத்தாகும். நல்லுக்கவுண்டரின் தகப்பனார் பெயர் வெள்ளையன் (எ) கருப்ப கவுண்டர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நல்லுக்கவுண்டரின் தாயார் பெயர் எனக்கு தெரியாது. நல்லுக்கவுண்டர் தகப்பனாருக்கு எத்தனை மனைவிகள் என்று எனக்கு தெரியாது. 9ம் பிரதிவாதி வெள்ளைசாமி, 10ம் பிரதிவாதி மாணிக்கம் ஆகியோர்களை தெரியுமா என்றால் உள்ளூர் என்பதால் தெரியும். உறவினர்கள் இல்லை. மாணிக்கம், வெள்ளைச்சாமியின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. மாணிக்கம், வெள்ளைச்சாமியின் தகப்பனார் பெயர் கருப்பண்ணன் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. மேற்படி கருப்பண்ணன் தந்தை பெயர் ராயப்பன் என்றால் எனக்கு தெரியாது. வெள்ளையன் என்ற கருப்ப கவுண்டருக்கு 2 மனைவிகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் மனைவி மூலமாக வந்த வாரிசுகள் 9 மற்றும் 10 பிரதிவாதிகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2வது மனைவி மூலம் வந்த வாரிசுகள் தான் ராஜாமணி மற்றும் நல்லுக்கவுண்டர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வெள்ளையன் என்ற கருப்ப கவுண்டர் இறந்த பின்பு அவரது சொத்துக்களை முதல் மற்றும் 2ம் தாரத்தின் வாரிசுகள் கூட்டாக அனுபவித்து வந்து கூட்டு பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 9, 10ம் பிரதிவாதிகள் தான் ராஜாமணியின் சட்டப்பூர்வமான வாரிசு என்றால் சரியல்ல. வெள்ளையக்கவுண்டருக்கு யார்

யார் வாரிசு என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது சகோதரி 2 ம் பிரதிவாதி தாவா 1 முதல் 8 அயிட்ட சொத்துக்களை பொருத்து உயில் மூலம் தனக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி வாரிசு இல்லை என்பதால் அவ்வாறு ஒரு உயில் தாயார் செய்து வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் நல்லுச்சாமி நல்லுக்கவுண்டருக்கு மாமா உறவுமுறை என்றால் சரிதான். ராஜாமணி இறந்து சுமார் 5, 6 வருடங்களுக்கு மேல் இருக்கும். ராஜாமணி அவரது கணவர் ஊரில் வசிக்கவில்லை. தாயார் வீட்டில் தான் இருந்தார். ராஜாமணிக்கு வாதி அருணாசலம் காரியம் செய்தார். அருணாசலம் ராஜாமணிக்கு காரியம் செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அருணாசலம் குடும்பத்திற்கும், ராஜாமணி குடும்பத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும், அதன் காரணமாக ராஜாமணிக்கு அருணாசலம் காரியம் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ராஜாமணி இறந்ததற்கு 9 மற்றும் 10 பிரதிவாதிகள் தான் காரியம் செய்தார்கள் என்றால் சரியல்ல. சிறும்பாயிக்கு நான் அண்ணன் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**